ஓம்
சிவமயம்

# மலேசிய அருள்நெறித் திருக்கூட்டம்
# கோலாலும்பூர்

அருள்நெறி நிலையம் 17, ஜாலான் செக்கோர், ஆஃப் ஜாலான் ஹலிமாதோன்,
3வது மைல் ஜாலான் கிள்ளான் லாமா, 58000 கோலாலம்பூர்

தலைவர் : 012-363 3446
செயலாளர்: 019-359 3860

## பட்டினத்தார் குருபூசை
**02-08-2026 (ஞாயிற்றுக்கிழமை)**

"அத்தனை, முப்பத்து முக்கோடி தேவர்க்கு அதிபதியை
நித்தனை, அம்மை சிவகாம சுந்தரி நேசனை, எம்
கத்தனைப் பொன்னம்பலத்து ஆடும் ஐயனைக், காணக்கண்கள்
எத்தனை கோடி யுகமோ தவஞ்செய் திருக்கின்றனவே "

- தத்துவார்த்த விளக்க உரை பாடல் 20

அருள்நெறிச் செல்வர்களே, வணக்கம்!

நிகழும் மங்களகரமான பராபவ ஆண்டு, ஆடி மாதம் 17 ஆம் நாள் (ஆங்கிலம் 02-08-2026) ஞாயிற்றுக்கிழமை காலை மணி 9.00 முதல் அருள்நெறி நிலையத்தில் "பட்டினத்தார் குருபூஜை" நிகழ்வு டத்தோ டாக்டர் வ. கதிரேசன் அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெறும். மெய்யன்பர்கள் அனைவரும் தவறாமல் வருகை புரிந்து சிறப்பிப்பதுடன், சொற்பொழிவுகளையும், திருமுறை இன்னிசை நிகழ்வுகளையும் கேட்டுப் பயனுறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

## நிகழ்வுக் கொத்து

| | | |
|---|---|---|
| காலை மணி 9.00 க்கு | : | கூட்டுப் பிரார்த்தனை |
| காலை மணி 10.15 க்கு | : | தலைமையுரை |
| காலை மணி 10.30 க்கு | : | திருமுறை இன்னிசை - ஸ்ரீ பரஞ்ஜோதி விநாயகர் கோயில் மூத்த தேவார வகுப்பு மாணவர்கள் |
| காலை மணி 11.15 க்கு | : | சொற்பொழிவு - சிசத்திரு. செல்லபெருமாள் அவர்கள்<br>தலைப்பு: "பட்டினத்து அடிகள் தில்லையில் பாடி அருளிய தத்துவார்த்த விளக்க உரை" |
| மதியம் மணி 12.30 க்கு | : | தலைவர் நிறைவுரை |
| மதியம் மணி 12.45 க்கு | : | நன்றியுரை, தீபாராதனை; மகேஸ்வர பூசை |

**உபயம் : அமரர் அருள்நெறிச் செல்வர் மா. சுப்பிரமணியம் குடும்பத்தினர்**

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்**

இக்கண்,
செயலவையின் ஆணைப்படி
**ச. மனோகரன்**